

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான எம்.எச். ஜவாஹிருல்லா சந்தித்து, ஒன்றிய அரசு வக்ஃபு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் பி.அப்துல் சமத் மற்றும் ஈரோடு மாவட்ட அரசு காஜி முஹம்மது கிபாயத்துல்லாஹ் ஆகியோர் உள்ளனர்.

### எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணனுக்கு கிடைத்த பாரதிய பாஷா பரிஷத் அமைப்பின் விருது – அவரது

# எழுத்துப் பணிக்கான மற்றுமொரு ஊக்கமாக அமையும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, ஏப்.12 –

**எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணனுக்கு பாரதிய பாஷா பரிஷத் அமைப்பின் சாதனையாளர் விருது கிடைத்துள்ளது பற்றி குறிப்பிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இவ்விருது அவரது எழுத்துப் பணிக்கான மற்றுமொரு ஊக்கமாக அமையும் என்று பாராட்டியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:

இந்திய அளவில் புகழ்மிக்க பாரதிய பாஷா பரிஷத் அமைப்பின் விருது பெறவுள்ள எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு என் பாராட்டுகள்!

சமகாலத் தமிழிலக்கியத்தின் நன்கு அறியப்பட்ட முகமாக விளங்கி, குறிப்பிடத்தக்க பல படைப்புகளை அளித்து, சாகித்திய அகாதமி விருது, இயல் விருது, கலைஞர் பொற்கிழி விருது உள்ளிட்ட பல உயரிய அங்கீகாரங்களைப் பெற்றுள்ள அவரது எழுத்துப்பணிக்கான மற்றுமொரு ஊக்கமாக இவ்விருது அமையும் என நம்புகிறேன்.

தமிழ்ச்சமூகத்தின் வளர்ச்சிக்கும், மானுடத்தின் மேன்மைக்கும் உரமாகும் மேலும் பல படைப்புகளை அவரிடம் இருந்து எதிர்நோக்குகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோரிடம் முகாம் அலுவலகத்தில் கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் தமது புதல்வியும் மணமகளுமான டாக்டர் ஜெ.எஸ்.அக்ஸ்டி மேரீஸ் பிரியங்காவின் மணவிழா அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றார்.



# தி.மு.க. இளைஞர் அணி

# இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 12.04.2025 | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு | தேவனாங்குறிச்சி | பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்,** க.நந்தகுமார் |
| 2 | 12.04.2025 | கரூர் | குளித்தலை | தோகைமலை | செந்தில்வேல், வே.குணஸ்ரீ |
| 3 | 12.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி | வானவரெட்டி ஊராட்சி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஆ.ஷர்மிளா |
| 4 | 12.04.2025 | கன்னியாகுமரி மேற்கு | கிள்ளியூர் | நித்திரவிளை சந்திப்பு | இந்திராகுமார் தேரடி, ஜெ.ஜெபின் |
| 5 | 12.04.2025 | இராமநாதபுரம் | திருவாடனை | அண்ணா திடல், ஆர்.எஸ்.மங்கலம் | உமா, ரா.யோவான் மனுவேல்ராஜ் |
| 6 | 13.04.2025 | ஈரோடு வடக்கு | பவானி சாகர் | அரியப்பம்பாளையம் | எழுத்தாளர் வே.மதிமாறன், மு.கௌரி மனோகரி |
| 7 | 15.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் | மேல் சிறுவளூர் கூட்டு ரோடு | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, ச.ஐஸ்வர்யா |
| 8 | 18.04.2025 | திருப்பூர் வடக்கு | பல்லடம் | அண்ணா திடல், பொங்கலூர் | எழுத்தாளர் வே.மதிமாறன், கி.ரேஷ்மா |
| 9 | 19.04.2025 | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு | வெங்கமேடு, 9–வது வட்டம் | இரா.ராஜீவ் காந்தி, அ.நஸ்ரின் பானு |
| 10 | 19.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை | பேருந்து நிலையம் அருகில் | தமிழ் கா.அமுதரசன், இ.நேரு |
| 11 | 19.04.2025 | கடலூர் கிழக்கு | புவனகிரி | கம்மாபுரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி |
| 12 | 19.04.2025 | திருச்சி வடக்கு | முசிறி | கைகாட்டி, பரிசில் துறை ரோடு | செந்தில்வேல், ம.சையது முஷரப் |
| 13 | 20.04.2025 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிப்பாடி | குள்ளஞ்சாவடி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன் |
| 14 | 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | **நாஞ்சில் சம்பத்,** க.செல்வமணி |
| 15 | 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |
| 16 | 27.04.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, சி.கா.சுகன் மந்த்ரன் |

**அன்பகம்,** சென்னை – 18.

நாள் : 10–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**

செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி